வல்வெட்டித்துறை நகரசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 02 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வல்வெட்டித்துறை நகரசபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வல்வெட்டித்துறை நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 805,000 | 01 | 70,000 | - | - |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 01 | 229,257 | | |
| வகைப்படுத்தல் வழு | | | - | - | 01 | 7,000 |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 511இ546 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காயவின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 951இ768 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 275இ965 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 4இ684இ991 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 3இ975இ747 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

-------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 775 | 773 | |
| குத்தகை வாடகைகள் | 3,565 | 5,556 | |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 307 | 433 | |
| வேறு வருமானங்கள் | 20,368 | 22,938 | 11,277 |
| | 25,015 | 29,700 | 11,277 |

2.3.2 வருமான இழப்பு

மின்சார செயற்பாடுகள் அனைத்தும் 1999ம் ஆண்டிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு கையளிக்கப்பட்டபோதும் நகராட்சி மன்ற எல்லைப் பிரதேசத்திற்கு வீதி விளக்கு பொருத்துவதற்கு உள்;ராட்சி ஆணையாளரிடமிருந்து மீளளிப்பு பெறப்படாது சபைநிதி மூலம் ரூபா 136,885 செலுத்தியிருப்பது சபைக்கு வருமான இழப்பினை ஏற்படுத்தியுள்ளது.

2.3.3 நீதிமன்ற தண்டப்பணம்

நீதவான் நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 4,624,750 வருமானமாகவும் வருமதியாகவும் சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு:

| வருடம் | தொகை |
|---|---|
| | ரூபா |
| 2011 | 867,250 |
| 2012 | 3,757,500 |
| | 4,624,750 |

### 2.3.4 முத்திரைத்தீர்வைக் கட்டணங்கள்

i. 2012ம் ஆண்டு யூன் 30 வரையான முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 2,000,025 வருமதியாகவும் வருமானமாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறவிட ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2012ம் ஆண்டு யூலை-டிசம்பர் வரையான முத்திரைத் தீர்வைக் கட்டண விபரங்கள் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்து முகாமைத்துவம்

### 2.4.1 பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

சபையில் ரூபா 1,520,650 பெறுமதியான இரண்டு சில்லு உழவு இயந்திரம் மற்றும் நிழற்பட பிரதி இயந்திரம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பயன்பாடின்றி காணப்படுகின்றது.

### 2.4.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

கணிப்பீட்டுசபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாத 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு புத்தக பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் விபரம் கீழே காணப்படுகின்றது.

விபரம் வருமாறு:

| விபரம் | தொகை |
|---|---|
| நிலையான சொத்துக்கள் | 12,644,577 |
| களஞ்சிய பொருட்கள் | 341,704 |
| | 12,986,281 |

### 2.4.3 வருடாந்த இருப்பு கணிப்புச்சபை அறிக்கை

இருப்பு கணிப்புசபை அறிக்கை தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

i. 2012ம் ஆண்டின் இருப்பு கணிப்புச் சபைக்கு பார்வைக்கு சமர்ப்பிக்கப்படாத 177 எண்ணிக்கையான புத்தகங்கள் தொடர்பாக மீளாய்வாண்டிலும் எதுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. பௌதீக செவ்வை பார்த்தலில் 42 எண்ணிக்கையான சீலிங் மின் விசிறிகள் காணப்பட்டபோதும் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் 19 சீலிங் மின் விசிறிகள் காணப்படுகின்றன. 23 மின் விசிறிகள் இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான முகாமை தீர்மானங்களுடன் தொடர்பு

---

(அ) 1939ஆம் ஆண்டின் நகர சபை கட்டளைச்சட்டம்

---

| | |
|---|---|
| அத்தியாயம் ஏ பிரிவு 168 | முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் தனிப்பட்ட முற்பணங்களுக்கு தனியான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஏ பிரிவு 172 | பிரதான பேரேடு மாதாந்தம் இணக்கம் செய்து மீதி கணக்கிடும் முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஏஜ பிரிவு 176 | வைப்புப் பதிவேட்டில் மீதிகள் மாதாந்தம் பிரதான பேரேட்டுடன் ஒப்பிடப்பட்டு இணக்கம் செய்யப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் | 2011ம் ஆண்டின் அறவிட்ட்ட ரூபா 4,800 பெறுமதியான பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

2.6 ஒப்பந்த நிர்வாகம்

---

2.6.1 கைவிடப்பட்ட செயற்திட்டம்.

---

மீளாய்வாண்டின் சபைநிதி மூலமான மூலதன வேலைத்திட்டங்களில் ரூபா1,700,000 பெறுமதியான சீருவில் வடிகால் அமைப்பு வேலைத்திட்டம் முற்றாக கைவிடப்பட்டுள்ளது.

2.6.2 பகுதி நிறைவேற்றப்பட்ட செயற்திட்டம்

---------------------------------------------------------------

மயிலிறனை மயான மதிற்சுவர் அமைத்தல் வேலைத் திட்டமானது ரூபா 400,000 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு இதுவரை ரூபா 58,046 செலவு செய்யப்பட்ட ஆரம்ப வேலைத்திட்டத்தில் அக்கிராம மக்களின் எதிர்ப்பு காரணமாக வேலைத்திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.

2.7 செயற்பாட்டு செயற்திறமையின்மை

---------------------------------------------------------

சபையினால் செலுத்தப்பட வேண்டுமென சில்லறைக்கடனாளிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 195,051 பெறுமதியான மூலதன வேலைகள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக செலுத்தப்பட்டிருக்கவில்லை

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

பின்வரும் முறைகைள், கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

1. வருமானசேகரிப்பு
2. நிலையான சொத்துக்கள்
3. கணக்கீடு
4. மனிதவள முகாமைத்துவம்
5. நன்கொடை
6. வாகனங்களின் பயன்பாடு
7. நானாவித வைப்புக்கள்
8. வரவு செலவுத்திட்டம்